<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>

<u>அசல் வழக்கு எண்.155/2019</u>

பெயர்- திருமதி. அழகுமணி (எ) நதியா நாள்.06.06.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

1. கர்நாடகா மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 07.06.2022 ல் சலபதி என்பவர் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரில் சலபதி என்பவர் எனது கணவர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.27/2022 ல் column 5 ல் நதியா கணவர் பெயர் சலபதி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. கோழிபாளையத்தில் உள்ள சலபதியின் வீட்டில் திருமணம் ஆனதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா பெயர் கோபால், எனது அப்பா பெயர் குமார் என்றால் சரியல்ல. எனது அம்மா பெயர் உஷாராணி. எனது உடன்பிறந்த சகோதரர் பெயர் ரித்திக் ஆவார். எனது தாய், தந்தை, சகோதரர் பெயரிலுள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். முதல் தகவல் அறிக்கை எண்.27/2022 ல் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையில் 2022 ல் எனது வயது 21 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் படி 2016 ல் எனக்கு வயது 15 தான் இருக்கும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது நான் தனியாக 30.03.2022 ல் இறந்த செளந்திரராஜனின் வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

3. அந்த வாரிசு சான்றிதழை கோபிசெட்டிபாளையம், கோட்டாட்சியர் 26.06.2024 ல் இரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். சலபதி என்பவரை 2 வதாக நான் திருமணம் செய்து கொண்டதால் வாரிசு சான்றிதழ் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே 04.11.2016 ல் திருமணம் செய்ததாக சொல்வது இந்து திருமண சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இறந்த போன செளந்திரராஜனுக்கு 1, 2 வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்றால் சரியல்ல.

**<u>1 , 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.06.06 17:31:08 +0530